01-12-2023
O.S.No. 112/2018

பி.வா. சா. 3 சந்திரசேகரன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் வரவில்லை என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கிடையாது. அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும். ஆனால் அந்த பத்திரத்தில் நான் எந்த சாட்சியும் கிடையாது என்றால் சரிதான். வாதசாஆ.10 கிரைய பத்திரம் 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளதில் என்ன என்ன சொத்துக்கள் கண்டுள்ளது என்றால் தெரியாது. ஆனால் 3 ம் பிரதிவாதி பெயருக்கு 6 ஏக்கர் நிலம் இருப்பது எனக்கு தெரியும். அந்த சொத்தின் நான்குமால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி நிரந்தரமாக எந்த ஊரில் குடியிருக்கிறார் என்றால் கரூரில் இருக்கிறார். நான் சொல்வதுபோல் 3 ம் பிரதிவாதி கரூரில் குடியில்லை என்றும் கரூர் பைனான்ஸ் கம்பெனிக்காக 3 ம் பிரதிவாதிக்காக கரூரில் குடியிருந்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி கரூரில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. 1,2 லக்கச்சொத்துக்களின் அனுபவம் சம்மந்தமாக ரிக்கார்டுகள் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் பத்திரம் பார்த்தேன். பத்திரத்தை எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 4 மாதங்கள் முன்பு பார்த்தேன். அந்த விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்தை சசிக்குமார் என்பவர் விவசாயம் செய்து வருவது எனக்கு தெரியாது. வெள்ளைச்சாமி என்பவர்தான் செய்து வருகிறார். நிரூபண வாக்குமூலத்தில் வெள்ளைச்சாமிதான் பண்ணை விவசாயம் பார்த்து வருவதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். சசிக்குமார்தான் 5.7.2008 தேதி முதல் குத்தகைக்கு பேசி குத்தகைதாரராக இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான்

சொல்வது போல் 3ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை அனுபவிக்கவில்லை என்றும், எனக்கு அந்த சொத்தை பற்றியும் தெரியாது என்றும், கரூர் பைனான்ஸ்காரர் கேட்டுக்கொண்டதற்காக எனக்கு தெரியாத விவரத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:-

வெள்ளைச்சாமி என்பவர் தோட்டத்தில் வேலை செய்பவர்.

மீண்டும் குறுக்கு விசாரணை**:-**

வெள்ளைச்சாமி என்பவர் தோட்டத்தில் வேலை செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2023.12.01 16:34:53 +0530

Principal District Judge,
Dindigul.